பக்கங்கள்:10
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 07 புதன்கிழமை 22.12.2021 கதிர் 47

**இது ரகசியம் அல்ல!**

தென்னிலங்கையின் ஊடக நண்பர் ஒருவர் பேசினார். யுத்த காலத்திலும் தமிழர்களுக்குப் பரிவாகப் பேசியும் எழுதியும் வந்தவர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி பற்றி உரையாடினார்.

"யுத்த காலத்தில் பக்கம்02

# புலம்பெயர் மக்களுடன் புரிந்துணர்வுடன் அரசு

## ஆஸி. அமைச்சரிடம் கோட்டாபய தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 22

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தம் செய்வதற்குப் புலம்பெயர் மக்களுடன் புரிந்துணர்வுடன் அரசு செயற்பட்டு வருகின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 9

## வட, கிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கு மூன்று ஆண்டுகளில் 16ஆயிரம் வீடுகள்

### இணைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் பெருமிதம்



யாழ்ப்பாணம், டிசெ.22

நாட்டுக்குள் இடம் பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மீள்குடியேற்ற அமைச்சு கடந்த மூன்று வருடங்களுக்குள் பதினாறாயிரம் வீடுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இந்த வருடத்தில் மட்டும் வடக்கு, கிழக்கிலும் ஆறாயிரம் வீடுகளை அமைப்பதற்கான நிதி பகிர்ந்தளிக்கப் 9

## ‘ஜெனிவா தோல்வியின் எதிரொலி’ நூல் கோட்டாவிடம் நேற்று நேரில் கையளிப்பு



கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வேந்தரும் நாரஹேன்பிட்டி அபயராமாதிபதியுமான சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரால் எழுதப்பட்ட ‘ஜெனிவா தோல்வியின் எதிரொலி’ நூல், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, நேற்று முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் 9

## பஸ் கட்டணமும் எகிறும் அறிகுறி

நாட்டில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஆரம்பக் கட்டணத்தை 25 ரூபா ஆக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சர்வகட்சி மாநாடு; தயாராகும் அரசு!

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்காகச் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வர்த்தக அமைச்சர் பந்தல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார நெருக்கடியைத் தேசிய பிரச்சினையாகக் கருதி அனைத்து அரசியல் கட்சிகளும், அரசியல் நோக்கத்தை மறந்து இதற்கு ஒத்துழைப்பு 9


## 24 பேர் சாவு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா 9

## தமிழரசு எஸ்.ரி.ஆர். பிரிந்தார்



இலங்கைத்தமிழரசுக் கட்சியின் முன்னைநாள் பொருளாளரும், கட்சியின் மூத்த பிரமுகருமான ‘எஸ்.ரி. ஆர்’ 9

## ஒன்றுபட்ட தமிழ் பேசும் தரப்புகளின் ஆவணத்துக்கு பூர்வாங்க இணக்கம்

### தலைவர்களின் நேற்றைய கூட்டத்தில் கிட்டியது

தமிழ்ப் பேசும் தரப்புக்களின் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் கடிதம் ஒன்றை - ஆவணத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்புவது தொடர்பான முன்முயற்சியில் தமிழ் பேசும் தரப்புக்களின் தலைவர்களிடையே ஓர் இணக்கநிலை 2



## 14 வயது சிறுமி மர்ம மரணம்; தந்தையும் சித்தப்பாவும் கைது

கம்பளை, மவுண்டல்பெல் பகுதியில் 14 வயது சிறுமி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இதையடுத்து அச்சிறுமியை தாக்கினர் எனக் கூறப்படும் சிறுமியின் தந்தையும், சித்தப்பாவும் கம்பளைப் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நிபுனி நிமந்திகா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி கடந்த திங்கட்கிழமை அவரது சித்தப்பாவின் வீட்டுக்குச் சென்றுள்ளார் எனவும், அங்கு சித்தப்பாவால் தாக்கப்பட்டுள்ளார் எனவும் சிறுமியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 2



தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்** - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழ் மக்களுக்கு ராஜபக்ஷக்கள் என்னென்ன கொடூரத்தைச் செய்தார்களோ, அதே நெருக்கடிகளை. அதே ராஜபக்ஷக்களிடம் அனுபவிக்கும் நிலைமை சிங்கள மக்களுக்கும் வருகின்றது. இது தான் கௌதம புத்தர் போதித்த கர்ம வினைத் தத்துவம் போலும். தமிழ் மக்கள் மீது, தனது படைகள் மூலம் அப்போது பொருளாதாரத் தடை விதித்தனர். பால் மாவில் இருந்து அன்றாட – அத்தியாவசிய பொருள்களுக்கு அல்லாடினர் தமிழ் மக்கள். அந்த நிலைமைதான் சிங்கள மக்களுக்கும் இன்று. ஒரே வித்தியாசம். அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை. அதனால் பொருளாதாரத் தடை தன்பாட்டில் வந்துள்ளது. பெற்றோல் விலை அதிகரிப்பை அடுத்து நகர்ப் புறங்களில் மக்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டத்துக்கு ஏற்கனவே பெற்றோல் – மண்ணெண்ணைக் கலவையில் இறங்கி விட்டனர். தமிழ் மக்களின் அனுபவப் பகிர்வுகளைப் பெற்று, அவர்கள் முழுமையாகத் தனித்து மண்ணெண்ணைக்கு மாறும் நிலைமை விரைவில் வரும். யுத்த காலத்தில் தமிழர்கள் குடியிருப்புகள் மீது குண்டுகள் விழுந்து வெடித்தன. அந்த மக்கள் நெருப்பை மடியில் கட்டிக் கொண்டு வாழ்வது போல வாழ்ந்தனர். இப்போதும் வெடிப்புகள் இங்கும் நடக்கின்றன. ஒரே வித்தியாசம், இது காஸ் அடுப்பு வெடிப்பு. ஆனால் அனைத்து வீடுகளிலும் தாய்க் குலங்கள் மரண பீதியுடன்தான் சமையலில் ஈடுபடுகின்றனர் – முன்னர் தமிழ்ப் பிரதேச வீடுகளில் மக்கள் மரண பீதியுடன் வாழ்ந்த மாதிரி. யுத்த காலத்தில் தமிழ் மக்கள் ஒரே வேளை உணவுடன் பட்டினி கிடக்கும் நிலை இருந்தது. அது இப்போது தெற்குக்கும் வந்து விட்டது. டாம்பீகமான மரக்கறி வகைகள் இல்லாமல் வெறும் இலை, குழை, கீரை வகைகளுடன் ஒரு நேர உணவு, யூரியா இல்லாமல் விவசாயம் என்பவை எல்லாம் யுத்த காலத்தில் தமிழர்கள் பட்ட கஷ்டம்தான். இப்போது நம்மவர்கள் அனுபவிக்கின்றார்கள்." – என்றார் என் நண்பர்.

நான் "ஒரு திருத்தம்" – என்றேன். என்ன வென்று வியப்புடன் கேட்டார் அவர்.

"அந்த நெருக்கடிகள், பின்னடைவுகள், ஆபத்துக்களுக்கு மத்தியிலும் மனத் திருப்தியுடன் தமிழ் மக்கள் அப்போது நின்றனர். அது மாத்திரமல்ல, தங்கள் பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்தவர்கள் தங்கள் பிள்ளைகள் மீது நம்பிக்கையையும், வாஞ்சையையும், அவர்களுக்கு முழு ஆதரவையும் தமது மனதில் கொண்டு திருப்தியுடன் நின்றார்கள். ஆனால் இன்று தெற்கில் நிலைமை அதுவல்ல. ஆட்சிப் பீடத்தை மண் அள்ளி வீசித் திட்டாத குறையில், அவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்த மக்கள் உள்ளனர்." – என்றேன். அவர் ஒப்புக் கொண்டார்.

அதேசமயம், தமக்கு ஒரு விடயம் விளங்கவில்லை என்றார் அவர். என்ன வென்று கேட்டேன்.

"நாடு மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு கிடக்கின்றது. இந்தச் சமயத்தில் நிதி அமைச்சர் பண்டிகைக்கால விடுமுறைக்கு டுபாய்க்கும் அமெரிக்காவும் 'விசிட்' அடிக்கின்றார். பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை, இந்தியா பிணை எடுக்கப் போவதாக அவரே கூறுகின்றார். ஆனால் இங்கு நாட்டில் – களத்தில் – நடப்பவற்றைப் பார்த்தால் அப்படி இந்திய உதவியை கொழும்பு எதிர்பார்த்து இருப்பது போல தெரியவில்லை. கொழும்பின் போக்கு – செயற்பாடுகள் – அத்தகைய பிரதிபலிப்புகளைத்தான் காட்டுகின்றன. இலங்கையைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் விதிமுறைகள் குறித்து இந்தியா தீவிரமாக ஆராய்ந்து, திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றது என்று கூறப்படும் இச்சமயத்தில்தான் சீனத் தூதுவரை வடக்கே அழைத்து, இந்தியாவுக்கு நெருக்கமான எல்லை வரைக் கூட்டிச் சென்று, புதுடில்லியை சீற்றத்துக்கு உள்ளாக்கும் இராஜதந்திர நகர்வுகளை கொழும்பு முன்னெடுக்கின்றது. போதாக்குறைக்கு அத்துமீறியவர்கள் எனத் தெரிவித்து, இந்திய – தமிழக – மீனவர்களை வாரி அள்ளி, தமிழகத்தில் குழப்பத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி நிற்கின்றது. இவை எல்லாம் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இலங்கையைப் பிணை எடுக்கும் திசைக்கு புதுடில்லியை நகர விடாதே...?" – என்றார் அவர்.

"விரைந்து பொருளாதார நெருக்கடி மீட்புத் திட்டத்தை இந்தியாவை மேற்கொள்ளச் செய்வதற்கான இராஜதந்திர அழுத்தமாக – நகர்வாக – இவற்றை கொழும்பு முன்னெடுக்கின்றதோ என்னவோ?" – என்று அப்பாவித்தனமாக நான் கேட்டேன்.

"இல்லை, இல்லை. இவை இந்தியாவைச் சீண்டி கொழும்பிலிருந்து புதுடில்லியை மேலும் தள்ளி வைக்கும் நடவடிக்கைகள். அரசுக்குள் இருக்கும் ஒரு தரப்பே இத்தகைய சூழ்ச்சிகரமான நடவடிக்கைகளுக்குக் காரணம்." – என்றார் அவர்.

அது சரியாகத்தான் இருக்கும் போல் என்று எனக்குப்பட்டது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே?

★ ★ ★

இரண்டு விடயங்கள் குறித்து எழுத வேண்டியுள்ளது.

ஒன்று – பிரதேச அபிவிருத்தி பற்றிய கூட்டங்களை ஒட்டி, அமுல்பேபியின் அராஜக அலப்பறை குறித்துத் தொடர்ச்சியாகத் தகவல்கள், செய்திகள், விவரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. தெற்கில் ராஜபக்ஷக்கள் சர்வாதிகாரம் என்றால், வடக்கில் அமுல்பேபியின் அராஜகத்துக்கு தலையாட்டும் – இல்லை, இல்லை, வாலாட்டும் – அதிகாரிகள் கூட்டத்தின் கேவலம். அது குறித்து எழுத வேண்டும்.

நேற்று நடந்த தமிழ்ப் பேசும் தரப்புகளின் கொழும்புக் கூட்டம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் பொய்ப் பிரசார தகவல்கள். அவற்றை அம்பலப்படுத்த வேண்டும்.

அவை இரண்டும் குறித்தும் நாளை பார்ப்போமா?

– மின்னல் –

## ஒன்றுபட்ட தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆவண வடிவம் தொடர்பில் பூர்வாங்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டல் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ் பேசும் தரப்புக்களின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தப் பூர்வாங்க இணக்கம் ஏற்பட்டது.

அழைக்கப்பட்ட அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றியமை சிறப்பம்சம். புளொட் சார்பில் சித்தார்த்தன் தமக்குப் பதிலாக ஆர்.ராகவனை அனுப்பியிருந்தார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தமது சார்பில் அமீர் அலியை அனுப்பியிருந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தலைவர் ஹக்கீமுடன் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பரும் பங்குபற்றினார்.

கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமை வகித்தார். அவருடன் சுமந்திரனும் இக்கூட்டத்தில் பங்குபற்றினார்.

ஏற்கனவே இக்கூட்டத்தில் பங்குபற்றிய பிரதிநிதிகளின் 2 பக்க நகல் ஆவணமொன்றை நேற்று கூட்டத்தில் ரெலோ கையளித்திருந்த நிலையில், அந்த நகல் ஆவணத்தை ஏற்பதற்கு தமிழரசுத் தரப்பு மறுத்தது. தமிழரசு தரப்பினால் 8 பக்க நகல் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், மற்றைய நகலின் சில விடயங்களை (3 பந்திகளை) இந்த நகலில் சேர்த்துக்கொள்வதற்கான இணக்கம் காணப்பட்டது.

இந்நிலையில் வயதில் மூத்த தலைவர்கள் கூட்டத்திலிருந்து வெளியேற எஞ்சியோர் ஒன்றிணைந்து தொடர் கலந்தாலோசனைகளில் ஈடுபட்டனர். அதனடிப்படையில் இரண்டு ஆவணங்களையும் ஒன்றிணைத்து புதிய நகல் வடிவத்தைத் தயாரிப்பதில் நேற்று மாலை முழுவதும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் ஈடுபட்டிருந்தனர்.

எம்.ஏ.சுமந்திரன், மனோ கணேசன், நிசாம் காரியப்பர், செல்வம் அடைக்கலநாதன், குருசாமி சுரேந்திரன், எச்.ஸ்ரீகாந்தா, மாவை சேனாதிராஜா ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 6 மணியளவில் நகல் வடிவதற்கான பூர்வாங்க இணக்கம் எட்டப்பட்டது.

தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ள 8 விடயங்களையும் இணைப்பாகச் சேர்ப்பதற்கும், அத்தோடு நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்ட அம்சங்களையும் (3 பந்திகளை) ஒன்றிணைத்து, புதிய நகல் வடிவத்தைத் தயாரிக்கும் பொறுப்பு தமிழரசின் பேச்சாளர் சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அது தயாரிக்கப்பட்டதும் அதனை அவர் எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பி வைப்பார். அவையும் அவற்றை ஆராய்ந்து சம்மதித்த பின்னர், அது பகிரங்கப்படுத்தப்படுவதோடு, அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைந்து அதில் ஒப்பமிடவும் அதனை இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

## 14 வயது சிறுமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறுமியின் தந்தையும் அவரைத் தாக்கி, வீட்டிலிருந்து வெளியேற்றியுள்ளார். இதையடுத்து உறவினர் ஒருவர் சிறுமியை அவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு வைத்தே அவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

கம்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622








# கிணற்றில் நீராடச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

வவுனியா கொக்குவெளி பகுதியில் கிணற்றில் நீராடச்சென்ற சிறுவன் ஒருவர் மாயமாகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிராம மக்களின் தொடர்ச்சியான முயற்சியால் கிணற்று நீர் வெளியில் இறைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவத்தில் அகிலேஸ்வரன் தனுசன் (வயது - 16) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாமடு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கு மாகாணம் மிக விரைவில் மத்தியின் கட்டுப்பாட்டுக்கு செல்லும்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. ஆரூடம்

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறாமல் இன்றைய நிலை தொடர்ந்தால் வடமாகாணம் மிக விரைவில் மத்தியின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு சிங்கள மயமாகிவிடும் என சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்த கேள்வி பதிலில் இந்த விடயத்தை தெரிவித்துள்ள அவர், இந்தநிலை ஏற்பட்டால் சமஷ்டிக்கோ, கூட்டுச் சமஷ்டிக்கோ, சுய நிர்ணய உரிமைக்கோ போராடுவது அர்த்தமற்றதாகப் போய்விடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறாததால் ஒட்டுமொத்த சிறுபான்மையினரும் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தாலேயே மலையக மற்றும் முஸ்லிம் தலைவர்களும் தம்மோடு இணைந்துள்ளனர் என விக்னேஸ்வரன் கூறினார்.

இன்றைய நிலையில் சட்ட ரீதியாகத் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கும் ஒரே பிடிமானம் போதிய அதிகாரமற்ற 13 ஆவது திருத்தச் சட்டம் ஒன்றே என்றும் அதை நீக்கினால் மத்திய அரசாங்கம் துணிந்து வடக்கு கிழக்கை ஆக்கிரமித்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



ஒற்றையாட்சியின் கீழ் எமது அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது எனக் குறிப்பிட்ட விக்னேஸ்வரன், சில முக்கிய நடைமுறைப் பிரச்சினைகளை பதின்மூன்றாம் திருத்தச்சட்ட அமுலாக்கத்தின் ஊடாக நாம் கையாளலாம் எனக் கூறினார்.


# நன்றி நவிலல்



## திரு.மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன் (ம.வ.கானமயில்நாதன்)

(ஓய்வுபெற்ற பிரதம ஆசிரியர், உதயன், சஞ்சீவி, காலைக்கதிர் பத்திரிகைகள்)

எமது ஞானவிளக்கு **அமரர் திரு.ம.வ.கானமயில்நாதன்** அணைந்த செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டு, நேரில் வந்து தேற்றியவர்களுக்கும், இறுதி மரியாதையிலும் இறுதிச் சடங்கிலும் அஞ்சலி நிகழ்விலும் நேரில் கலந்துகொண்டு ஆற்றுப்படுத்தியவர்களுக்கும், அஞ்சலி உரைகள் நிகழ்த்தியவர்களுக்கும், நினைவுக் குறிப்புகள் எழுதியவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலமாகவும் முகப் புத்தகம் மற்றும் இதர வழிகளிலும் எம்மை ஆறுதல் படுத்தியவர்களுக்கும் சிறப்பு கௌரவம் செய்த உதயன் குழுமம் மற்றும் காலைக்கதிர் - பசுமை இல்லம், ஐ.பி.சி. தமிழ் ஊடக அமைப்பு மற்றும் பிரதான முதற்பக்க செய்தியாக வெளியிட்ட ஊடகங்கள் ஏனைய ஊடகத்துறை சார் அனைத்து உள்ளங்களிற்கும் ஊடக நிறுவனங்களிற்கும் துணையாக நின்று உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**22.12.2021 இன்று நடைபெறவுள்ள அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

- குடும்பத்தினர் -


# லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் விலையை அதிகரித்துள்ளது

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் விலையை அதிகரித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்றேன் பெற்றோல் லீற்றரொன்றின் விலை 177 ரூபாவாக அதிகரித்துள்ளது. முன்னர் இதன் விலை 157 ரூபாவாக இருந்த நிலையில் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 95 ஒக்றேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 210 ரூபாவாகும்.

புதிய விலை உயர்வால் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் ஒட்டோ டீசல் 111 ரூபாவிலிருந்து 121 ரூபாவாக உயர்ந்துள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 144 ரூபாவாக இருந்த இதன் விலை 159 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இதேவேளை, 77 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலை 87 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் கட்டனத்தை குறைந்தது 25 வீதத்தால் உயர்த்த முடிவு?

எரிபொருள்களின் விலைகளை திருத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறைந்தபட்சமாக பஸ் கட்டணத்தை 25 ரூபாவாக அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவித்துள்ள அந்தச் சங்கம், இதற்கான கலந்துரையாடலை நடத்த இன்று பிற்பகல் கூடவுள்ளனர்.

அண்மையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதும் நாடு எதிர்கொண்ட நிலைமையைக் கருத்திற் கொண்டு பஸ் கட்டணத்தை அதிகரிக்கவில்லை என அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

கட்டணத்தை அதிகரிக்காமல் துறையை மேம்படுத்த பல முன்மொழிவுகளை அவர்கள் சமர்ப்பித்தனர் எனவும், துரதிஷ்டவசமாக அந்த முன்மொழிவுகளை செயற்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

உதிரிப் பாகங்கள் உள்ளிட்டவையின் விலை அதிகரித்துள்ள நிலையில் பஸ் கட்டணத்தை அதிகரிப்பது பொது மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் என்பதால், தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அவர் தெரிவித்தார்.

மேலும் பஸ் கட்டண அதிகரிப்பு என்பது வெறும் மாற்று யோசனையே என்றும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

# மரக்கறிகளின் தேவை அதிகரிக்கப்பட விலைவாசி மேலும் அதிகரிக்க வாய்ப்பு

பண்டிகைக் காலங்களில் அதிகரித்து வரும் மரக்கறிகளின் தேவையை பூர்த்தி செய்ய முடியாது என்பதால் விலைவாசி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்த வியாபாரிகள் அதிக விலை கொடுத்து விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகளைக் கொள்வனவு செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடக சந்திப்பில் அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

கரட் விலை 320 முதல் 480 ரூபா வரையிலும், கோவா 230 முதல் 250 ரூபா வரையிலும், வெண்டிக்காய் சுமார் 260 ரூபா வரையிலும், பீட்ரூட் 370 வரை யிலுமவிற்பனை செய்யப்படுகின்றன எனக் கூறினார்.

மேலும் தக்காளி விலை சுமார் 270 ரூபா வரைக்கும் குடை மிளகாய் சுமார் 700 ரூபா வரையிலும், பீன்ஸ் சுமார் 370 ரூபா வரையிலும், பச்சை மிளகாய் சுமார் 800 வரையிலும் விற்பனையாகின்றன என அவர் கூறினார்.

இதேவேளை பண்டிகைக் காலம் என்பதால் சில மரக்கறிகள் சந்தைக்கு கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ராஜபக்ஷக்களின் கீர்த்தி

**இலங்கையின் பொருளாதார நிலைமை நாளொரு நெருக்கடியும், பொழுதொரு சிக்கலுமாக மோசமாகிக் கொண்டிருப்பது கண்கூடு. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.**

**வடக்கின் சித்தர் சிவயோக சுவாமிகளின் வார்த்தைகளில் கூறுவதானால் 'எப்பவோ முடிந்த காரியம்'.**

**ராஜபக்ஷக்களின் ஆட்சிப்பீடத்தை மீள அரியணை ஏற்றுவதற்கு பௌத்த, சிங்கள மக்கள் தீர்மானித்த போதே இப்படியாகும் என்பது முடிவு செய்யப்பட்ட விவகாரமாகி விட்டது.**

**வருட இறுதியில் நிலைமை இப்படியாகும் என்று இப்பத்தியிலேயே பல தடவைகள் கோடி காட்டி வந்துள்ளோம். அதுதான் நடக்கின்றது.**

**கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் எரிபொருள் விலையேற்றத்தைப் பெரிய அளவில் அதிகரிக்க விடாமல் ஒரே நிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வைத்திருக்க முடிந்தது. அந்த ஆட்சியில் ஒரு தடவை எரிபொருள் விலையேற்றம் இடம்பெற்ற போது அதை ஆட்சேபித்து நாடாளுமன்றுக்கு சைக்கிள் சவாரிப் பவனி போய் பெரிய ஆரவாரங்களை ஏற்படுத்தினார் அப்போதைய எம்.பியான – முன்னாள் ஜனாதிபதி – மஹிந்த ராஜபக்ஷ. அதே பழக்கத்தை அவர் தொடர்வதாயின் இப்போது அவர் அடிக்கடி சைக்கிள் பவனி போக வேண்டியிருக்கும்.**

**எரிபொருள் விலை அதிகரித்த உடனேயே ஒட்டோக்கள், முதல் கிலோ மீற்றருக்கான கட்டணத்தை ஐம்பது ரூபாவிலிருந்து எண்பது ரூபாவுக்கு அதிகரித்து விட்டன. அதற்குப் பிறகு ஒவ்வொரு கிலோ மீட்டருக்குமான கட்டணம் 45 ரூபாவாகி விட்டது. இந்தக் கட்டண உயர்வை அறிவிக்க யாருடைய அனுமதியையும் ஒட்டோ உரிமையாளர் சங்கம் எதிர்பார்க்கவில்லை. தன்பாட்டிலேயே செய்து விட்டது.**

**பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருள்களுக்கான கட்டணக் கட்டுப்பாட்டு முறை நீக்கப்படுகின்றது என பேக்கரி உரிமையாளர் சங்கம் துணிவோடு அறிவித்திருக்கின்றது. அதாவது பாணுக்கும், ஏனைய பேக்கரிப் பொருள்களுக்கும் இனி கட்டுப்பாட்டு விலை இல்லை. விநியோகம் – தேவைக்கும் ஏற்ப பேக்கரியே இனி பொருள்களின் விலைகளை முடிவு செய்து விற்கும். அதற்கான அனுமதியை அரசு தங்களுக்குத் தந்து விட்டது என்கின்றனர் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தினர்.**

**பண்டிகைக்காலம் இது. புத்தளம், மாரவில நீர்கொழும்பு போன்ற கிறிஸ்தவ மக்கள் பெரும் எண்ணிக்கையில் வசிக்கும் பிரதேசங்களில் காஸ் தட்டுப்பாடு; பால்மா இல்லை.**

**கோட்டாபய அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வந்தவர்கள் – குறிப்பாக தென்னிலங்கைச் சிங்களவர்கள் – தலையில் அடித்துக் கொள்கின்றார்கள்.**

**நெருக்கடியின் ஆரம்ப கட்டம்தான் இது. புத்தாண்டு பிறந்த பின்னர் எதிர்பார்க்காத வீதத்தில் பொருள்களின் விலைகள் எகிறும். அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாததால் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி தடைப்பட்டு பற்றாக்குறை – தட்டுப்பாடு – நிரந்தரமாகும்.**

**எல்லாப் பின்னடைவுக்கும் – பாதிப்புகளுக்கும் – நெருக்கடிகளுக்கும் – கொரோனாத் தொற்றுச் சிக்கலைக் காரணம் காட்டி விட்டு, தன்னுடைய இராணுவத் தர்பார் ஆட்சியை கோட்டாபய தொடர்ந்து முன்னெடுப்பார்.**

**ஆட்சிக்கு – அதிகாரத்துக்கு – வந்த கையோடு, ஒவ்வொரு துறையையும் கையாள, அத்துறை சார்ந்த நிபுணர்களை நியமிப்பதை விடுத்து, முன்னாள் இராணுவத்தினரின் கைகளில் அத்துறைகளை ஒப்படைத்ததன் விளைவு இது என்கின்றார் அரசின் மூத்த அமைச்சர் ஒருவர். அதுதான் காரணமாக இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் மீளவே முடியாத அதலபாதாளத்துக்குள் நாட்டின் நிலைமையைத் தள்ளி விட்டு விட்டனர் ராஜபக்ஷக்கள் என்பது மட்டும் உண்மை.**

# கும்பாபிஷேகத்தில் சர்ச்சை தீர்த்துவைத்த ஆலய மணி!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கும்பாபிஷேகத்துக்காக கூட்டிய கூட்டத்தில் எழுந்த ஒரு சர்ச்சையை அங்குள்ள ஆலயமணி தானாக திடீரென ஒலித்து தீர்த்துவைத்த சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவம் வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

எந்தவொரு தூண்டியுமில்லாமல் தானாக ஆலயமணி ஒலித்தமை தொடர்பில் கூட்டத்தில் கூடியிருந்து அனைவரும் ஒருகணம் அதிர்ச்சியடைந்தார்கள். ஆச்சரியப்பட்டார்கள். அதிசயம் ஆனால் உண்மையான சம்பவம்.

அங்கு புதிய ஆலயத்தில் புதிய அம்மன் சிலையை வைப்பதா? பழைய ஆலய அம்மன் சிலையை வைப்பதா? என்ற சர்ச்சை எழுந்தது. ஒரு மணிநேரம் கூட்டத்திலிருந்தோரது கருத்துக்கள் அபிப்பிராயங்கள் பெறப்பட்டு என்ன முடிவு எடுப்பதென்று தெரியாமல் தலைவர் ஜெயசிறில் ஒரு முடிவை சொல்லிக்கொண்டிருக்கும்போது அருகிலிருந்த மரத்தில் கட்டப்பட்டிருந்த மணி தானாக கணீரென உச்சக்கட்ட ஒலியுடன் அடித்தது. அங்கு பறவையோ மனிதனோ யாரும் மணியை அடிக்கவில்லை. அந்த இடத்தில் ஒரு குருவியும் இருக்கவில்லை. இதனை கூட்டத்திலிருந்தோர் அனைவரும் உறுதிப்படுத்தினர். மெய்சிலிர்த்து மெய்மறந்தனர்.

அதனையடுத்து மணி அடிக்கும்போது சொல்லிய முடிவையே 'அம்மனின் வாக்கு' என அனைவரும் ஏகோபித்தமுறையில் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளிவைத்தார்கள்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது –

வரலாற்றுப்பிரசித்திபெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் தொடர்பான பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பழைய ஆலயத்தில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து அம்பிகை அடியார்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.கூட்டத்தில் முன்னதாக ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள், தலைவர் கி.ஜெயசிறில், ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, உபதலைவர் எஸ்.கமலேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

கும்பாபிஷேகத்துக்கான குழுக்கள் தெரிவு செய்யப்படுமுன்னர் பழைய ஆலயத்திலுள்ள கருவறை அம்மன் விக்கிரகத்தை என்ன செய்வது? புதிய ஆலயத்துக்கென புதிய அம்மன் சிலை தருவிக்கப்பட்டுள்ளது. பழைய ஆலயத்தை என்ன செய்வது? புதிய ஆலய கருவறையில் எந்த விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வது? என்ற விடயத்தில் சர்ச்சை ஏற்பட்டது.

கூட்டஅங்கத்தவர்களது கருத்துகள் பெறப்பட்டன. சிலர் பழையகோயில் அப்படியே இருக்கவேண்டும் எனவும் சிலர் பழைய கோயிலிலுள்ள அம்பாள் விக்கிரகமே புதிய ஆலயக் கருவறையில் வைக்கப்படவேண்டும் எனவும் இன்னும் சிலர் புதிய ஆலயத்தில் புதிய அம்பாள் விக்கிரகமே பிரதிஷ்டை செய்யப்படவேண்டும் எனவும் கருத்துரைத்தனர்.

இது ஆகமவிதிக்குட்பட்டதால் பிரதமகுரு முடிவைச்சொல்லட்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

பலரது கருத்துக்களையும் உள்வாங்கியவாறு தலைவர் ஜெயசிறில் புதிய ஆலயத்தில் பழையஆலய அம்பாள்சிலையை வைப்பதென்றும் புதியசிலையை வசந்தமண்டபத்தில் வைப்பதென்றும் சொல்லிக்கொண்டிருந்தவேளை ஆலயமணி திடீரெனத் தானாக ஓங்கி ஒலித்தது.

மறுகணம் அனைவரும் அம்பாளின் விருப்பமே அது. அவர் இவ்வாறு ஆலய மணி சமிக்ஞையில் தனது ஒப்புதலை – விருப்பத்தை – தெரிவித்திருக்கிறார். எனவே, அதன்படி செய்வோம் என அனைவரும் ஏனமனதாக கூறினர்.

அந்த வகையில் அந்த சர்ச்சை இலகுவாக ஆலயமணியால் தீர்த்துவைக்கப்பட்டது.

புதிய ஆலயத்துக்கான ஆவர்த்தன மகா கும்பாபிஷேகப்பெருவிழா நடைபெறவிருக்கும் தினம் தொடர்பாக ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் இருதினங்களை அறிவித்தார். சபையோரது கருத்துக்களை உள்வாங்கியபின்னர் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி நடைபெற சித்திமாயிருக்கிறதென அறிவித்தார். அதனையும் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

பின்பு மகா கும்பாபிஷேகத்துக்கான பிரதான விழாக்குழு மற்றும் பல உபகுழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

# சாதகமான பதில் கிடைக்காமையால் பணிப்புறக்கணிப்புப் போர் தொடரும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

சுகாதார அமைச்சிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காமையால் அரச வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு தொடரும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை 8 மணிமுதல் நாடளாவிய ரீதியாகவுள்ள வைத்தியசாலைகளில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமை உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

## எரிபொருள் விலைகள் அதிகரிப்பு;

# பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் நிறுவனத் தலைவர் இராஜினாமா!

பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் நிர்வாகப் பணிப்பாளர் உவைஸ் மொஹமட் பதவி விலகியுள்ளார்.

இந்நிலையில் குறித்த பதவிக்கு புதிய தலைவர் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உவைஸ் மொஹமட் பதவி விலகுகிறார் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில திங்கட்கிழமை அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெறுபவர்களே அரசியல்வாதிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

அரசியல்வாதிகள் என்பவர்கள் மக்களின் வரிப் பணத்தில் ஊதியம் பெறும் ஊழியர்களே என்றும் குறிப்பிட்ட அதேவேளை அரசியலுக்கு பதிலாக 'தேசத்துக்கான சேவையே' ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகும் என்றும் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பாக பலர் விமர்சனம் முன்வைத்தாலும் மக்களின் சேவைக்காக எமது கட்சி முன்னெடுக்கும் சேவையை எவராலும் நெருங்வே முடியாது என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் சேவை தொடர்பாக முன்னுதாரணம் எமது கட்சி வசமே உள்ளது எனவும் தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக தனது சுனில் எனும் தொனியால் இலங்கையின் இசை வரலாற்றில் அழியாத முத்திரையை பதித்த தனித்துவமான குரல் ஆளுமையான, மறைந்த சுனில் பெரேரா இசைவானரை நினைவு கூர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவின் பிரகாரம் செயற்படுத்தப்படும் 'ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மூச்சு' திட்டத்துக்கு இணைவாக ஆரோக்கியமான நாட்டை உருவாக்கும் நோக்கில் 'ஜன சுவய' திட்டத்தின் கீழ் 'சத்காரய' திட்டத்தின் 34 ஆவது கட்டமாக, 23 லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) மெரட்டுவலுனாவ வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

தலா 2 லட்சத்து 95 ஆயிரம்ரூபா பெறுமதியான எட்டு எடம் மல்டிபாரா மொனிட்டர்கள், உபகரணங்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் மாவட்ட வைத்திய அதிகாரி எப்.எம்.ஜயதிலக்கவிடம் இவ்வாறு நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கற்கைகள் பிரிவின் தலைவர் வண. பேராசிரியர் சங்கைக்குரிய அகலகட சிறிசுமண தேரரும் கலந்து கொண்டார்.

இசைவானரான சுனில் பெரேராவின் சகோதரர் பியல் பெரேரா உள்ளிட்ட உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு 'எதிர்க்கட்சியின் மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.



இதுவரை 33 கட்டங்களில் 992 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த வைத்திய உபகரணங்கள் ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்டுள்ளன.

## ஜனவரி முதலாம் திகதி முதல் தடுப்பூசி அட்டை கட்டாயம்!

பொது இடங்களுக்குப் பயணிப்பதற்குத் தடுப் பூசி அட்டை 2022 ஜனவரி முதலாம் திகதி முதல் கட்டாய மாக்கப்பட்டுள்ளதாக சுகாரதர அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## மோசடியில் ஈடுபட்ட 7 பேர் கைதாகினர்

சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்ட குழு ஒன்றைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

7 பேர் கொண்ட குழு ஒன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொம்பனி வீதியில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நிலையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## உண்ணிக் காய்ச்சல், டெங்கு, மலேரியா தொடர்பாக அவதானமாக இருங்கள்!

### வைத்தியர் யமுனாநந்தா கோரிக்கை

உண்ணிக் காய்ச்சல், டெங்கு மற்றும் மலேரியா நோய் தொடர்பாக மக்கள் அவதானமாகச் செயற்படுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யமுனாநந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

உண்ணிக் காய்ச்சல் என்பது மழைக்குப் பின்னரான காலத்தில் வயல்களில், தோட்டங்களில் வேலை செய்யும் போது தொற்றுகின்ற நோயாகக் காணப்படுகின்றது.

இதனை ஆரம்பத்திலேயே சிகிச்சை அளித்தால் பாதுகாக்கலாம் தவறும் பட்சத்தில் உயிரிழப்பு ஏற்படலாம். எனவே, நாய், பூனைகளுடன் பழகுபவர்கள் கவனமாக இருத்தல் வேண்டும். காய்ச்சல் வரும்போது உரிய மருத்துவ சிகிச்சை பெறவேண்டும்.

அதே போல யாழ்.போதனா வைத்தியசாலையில் சுமார் 10 நோயாளர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றார்கள். டெங்குக் காய்ச்சலும், இந்த மழையுடன் அதிகரித்து காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் சில நாள்களுக்கு முன் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவருக்கு மலேரியா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் மலேரியா நோய் தற்போது கட்டுப்பாட்டில் உள்ளதால், இலங்கையில் பரவுவதற்கு சாத்தியக் கூறுகள் குறைவு.

ஆனால் வெளிநாடுகளில் இருந்து அதாவது மலேரியா தொற்று உள்ள நாடுகளில் இருந்து இங்கு வருவோர் கட்டாயமாகத் தமக்குரிய மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை சுற்றுச்சூழலில் மலேரியா நோய்க் கிருமி தொற்றக் கூடிய ஏதுநிலை காணப்படலாம். ஒரு நோயாளி உள்ளதன் காரணமாக. எனவே மாநகர சபையினர் யாழ்.போதனா வைத்தியசாலை சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு நுளம்பு பெருகும் குப்பை கூளங்களை உடனடியாக அகற்ற வேண்டும். – என்றார்.

## பிராந்தியத்தின் கல்வி கேந்திர மையமாக இலங்கையை மாற்றுவதற்கு ஆஸி. உதவி

இலங்கையை பிராந்தியத்தின் கல்விக் கேந்திர மையமாக மாற்றுவதற்கு உதவுகிறோம் என ஆஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திருமதி கெரன் அன்ட்ரூஸ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் பட்டப்படிப்புகளைப் படிக்க விரும்பும் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளின் ஆரம்பக் கட்டத்தை இலங்கையில் தொடர்வதற்குத் தேவையான கல்வி நிறுவனங்களை இலங்கையில் நிறுவுவதன் மூலம் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாக அன்ட்ரூஸ் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சுடன் இணைந்து தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1.2 கோடி ஆஸ்திரேலிய டொலர் ஆகும்.

இலங்கையில் தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய உற்பத்திகளை இலங்கைக்கு கொண்டுவந்து பெறுமதி சேர்த்து, மீள் ஏற்றுமதி செய்வதற்கும் ஆஸ்திரேலிய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக கெரன் அன்ட்ரூஸ் தெரிவித்தார்.

பசுமை விவசாயம் தொடர்பான இலங்கையின் கொள்கையைப் பாராட்டிய அமைச்சர், ஆஸ்திரேலியாவும் நிலைபேறான விவசாயத்தில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 2022 ஆம் ஆண்டில், 75 வருடங்கள் நிறைவடைகின்றன. அந்த நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த நடவடிக்கைகளை அன்ட்ரூஸ் பாராட்டினார்.

1.17 கோடி ஆஸ்திரேலிய டொலர் உதவியை இலங்கையில் கொவிட் தடுப்புச் செயல்முறைக்கு வழங்கியதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது, மனித கடத்தலை நிறுத்துவதற்கு அப்போதைய ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஸ்கொட் மொரிசனுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. ஆஸ்திரேலியாவின் தற்போதைய பிரதமராக ஸ்கொட் மொரிசன் செயற்படுகின்றமையையிட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த ஜனாதிபதி, போதைப்பொருள் வியாபாரம், கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகள் மற்றும் மனித கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்கான வலுவான பொறிமுறையை இரு நாடுகளும் மேலும் எதிர்பார்த்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடலின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கான பணிகளுக்குத் தனது அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும், பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் அன்ட்ரூஸ் கூறினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தம் செய்வதற்கு புலம்பெயர் மக்களுடன் புரிந்துணர்வுடன் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

## யாழில் பட்டம் ஏற்றும் போது வானில் பறந்த குடும்பஸ்தர்

யாழில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பட்டத்தின் கயிற்றை விடாது, சுமார் 40 அடி உயரத்தில் 5 நிமிடம் வரை தொங்கிக் கொண்டிருந்த சம்பவம் வடமராட்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ். பருத்தித்துறை புலோலி பகுதி வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது –

இளைஞர்கள் பலர் பட்டம் விட்டுக் கொண்டிருந்த போது பட்டத்தின் கயிற்றை ஒரு மரத்தில் கட்டி வைத்து விட்டு, பட்டம் ஏற்றியுள்ளனர்.

இந்நிலையில், பட்டம் ஏற்றிய இளைஞர்களால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் கைவிட்டுள்ளனர். இளம் குடும்பஸ்தர் ஒருவர் மட்டும் பட்டத்தின் கயிற்றை விடாது, சுமார் 40 அடி உயரத்தில் 5 நிமிடம் வரை தொங்கிக் கொண்டிருந்துள்ளார்.

மேலும், 40 அடி உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் பட்டம் கட்டப்பட்ட கயிற்றை நோக்கி பின் நகர்ந்து சுமார் 20 அடி உயரத்தில் இருந்து தோட்டச் செய்கைக்காக பண்படுத்தப்பட்ட நிலத்தில் வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த குடும்பஸ்தர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் நலமாக உள்ளார் எனப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இளம் குடும்பஸ்தரின் மகள், பட்டக் கயிற்றில் தனது தந்தை தொங்கிய நிலையில் பறப்பதைக் கண்டு, அந்த ஆபத்தைப் புரிந்துகொள்ளாது, ஆச்சரியத்தில் கைதட்டி மகிழ்ந்துள்ளமையையும் காணக்கூடியதாக இருந்தது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 228

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்




**591. இரேனியஸ் செல்வின் அந்த பதிவின் கருத்தாக்கம் என்ன?**

அவர் கருத்துப்படி, அரசின் 2030 வரையான திட்டம் இப்பொழுது 2050 வரை கோடி காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சிங்கள மக்கள் எவ்வாறு தமிழ் பிரதேசங்களில் குடியேற்றப்படுகிறார்கள், அதன் நோக்கங்கள் என்ன, எப்படி மகாவலி பிரதேசம் என்ற ஒன்று அமைக்கப்படுவதற்காக மணல் ஆறு(இப்பொழுது வெலி ஓயா) வரை வந்து முல்லைத் தீவு பகுதிகளும் ஆக்கிரமிக்கப் படுகின்றன, இதே முறையில் அனுராதபுரத்திற்கும் கடல் எல்லை தேவை என்பதால் மன்னார் வரை காணிகள் சுவீகரிப்புக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற, இந்த 2050 வரையினாலான திட்டத்தை கணனியில் பார்த்தால் அதன் விவரங்களும் தமிழ் பிரதேசங்களும் எப்படி ஊடறுக்கப்படுகின்றன என்பது புரியும்.

சீனாவின் தூதுவர் யாழ்ப்பாணம், மன்னார் வந்தமையை இந்த திட்டங்களின் அடிப்படையில்தான் பார்க்க வேண்டும். இஸ்ரேல் பலஸ்தீனத்தின் பகுதிகளை ஆக்கிரமிப்பதை சர்வதேசம் பார்த்திருக்கிறதோ, அது போல்தான் தமிழ் மக்களது நிலையும் உள்ளது. தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் எப்பொழுதும் அர்த்தமுள்ள முறையில் தமிழ் தேசியத்தை கட்டி வளர்த்தவர்கள அல்லர். இவர்கள் பேசிய தேசியம் நாடாளுமன்ற கதிரைகளுக்குத்தான். தமிழ் சிவில் அமைப்புக்களோ, தமிழ் அரசியல் ஆய்வாளர்களோ அழைக்கப்பட்டு, எப்படியான கட்டமைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டு, தமிழ்த் தேசியம் பலப்படுத்த வேண்டும் எனக் கேட்பதில்லை. தேர்தல்கள் வருகின்றன. வெல்பவர் தனது தொகுதியில் சிலருக்கு அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றுத் தர முயற்சிக்கிறார். அப்படியான தேசியம் உருளுகிறது என்றும், இந்த முறையில் அவர்கள் கேட்கும் சமஷ்டி ஒரு நாள் வரும், அது எப்பொழுது என்றால் தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களால் கோப்பியும் பாலும் கலந்த நிலையில்தான் என்று இடித்துரைத்தார் .

அந்த கூட்டத்தில் கருத்து சொன்ன 'காலைக்கதிர்' ஆசிரியர் வித்தியாதரன் கறுப்பு அங்கிகள் அணிந்த தமிழரசின் சட்டத்தரணிகள் எப்பொழுதும் போட்ட கணக்கு, எத்தனை ஆசனங்களை



மற்ற பகுதிகளுக்கு கொடுக்க வேண்டும், தாங்கள் எத்தனையை வைத்துக் கொள்ளலாம் என்பதுதான். ஆனால் புதிய கணிப்பு முறைகள் வந்த பொழுது அதன் அடிப்படையில் எவ்வளவு வாக்குகள் விகிதாசாரப்படி தேறும் என்ற கணக்குகளை பார்க்கவில்லை. உதாரணத்துக்கு கூட்டணியுடன் சேர்ந்து கேட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். எப்படி கூட்டணியின் வாக்கு பலத்தில் அவர்களின் ஆசனங்களிலும் பார்க்க கூடியவற்றை பெற்றது என சுட்டிக்காட்டினார்.அந்த கணக்குகளைக் கூட சரியாகப் பார்க்கவில்லை. அப்படிப் பார்த்தால் எல்லோரையும் கூட்டமைப்பு என்று கேட்பதை விட்டு, தேர்தலுக்காக பேசாமல் தனித்தனியாகப் போட்டியிட்டுப் பின் தெரிவானவர்களை சேர்த்து ஒற்றுமையாக கோரிக்கைகளை வைக்கலாம். தேர்தலில் வெல்லுவதற்கான அரசியல்தான் கூட்டு சேர்ந்திருப்பதிலும் நியமனங்கள் கொடுப்பதிலும் உண்டு. நியமனக்குழு உறுப்பினர்கள்,வேட்பாளர்கள் எல்லோரும் கட்சியின் ஒரு குழுவே. அவர்கள் பார்த்துக் கொள்வதுதான் நடக்கிறது என்றார்.

அவருடைய ஆதங்கமும் உணர்ச்சியும் சயனைட் குப்பியைக் கட்டிக் கொண்டு போராடிய இளைஞர்களுக்காகவும் அவர்களது அர்ப்பணிப்புக்கள் வீணாகிப் போனதிலும் இருந்தது. தேசியத்தை அரசியல்வாதிகளிலும் பார்க்க பழுதாக்கியவர்கள் மக்கள்தான் என, முள்ளிவாய்க்கால் முடிந்த உடன் நடந்த தேர்தல் விகிதாசாரத்தை சுட்டிக் காட்டினார்.

இந்த கருத்துக்களும் தேர்தல் அரசியலையே சுற்றி வந்தது. இவைகளெல்லாவற்றையும் கேட்க நண்பர் ஒருவர் 'இது எங்களுக்குப் பிரயோசனமானது' என்ற குறிப்புடன் அனுப்பிய பர்வின் சுல்தானாவின் பேச்சின் கருத்தாக்கம்தான் நினைவு வந்தது.

**592. பர்வின் சுல்தானாவின் கருத்தாக்கம் என்ன?**

இவர் தமிழ் நாட்டின் பிரபலமான மேடைப்பேச்சாளர், அவை பல கணனிப் பதிவுகளில் (youtubeஇல்) உண்டு.

அண்டிக் கொண்டிருக்காமல் இருப்பதும், ஒன்றையே நம்பிக் கொண்டிராமல் சுயமாகவும் வாழப்பழகிக் கொண்டால் முன்னேறி விடுவோம் என்பதுதான் அதன் சாரம். அதற்கு உதாரணம் ஒன்றும் தனது பாட்டி சொன்ன கதைகளையும் உவமானமாக்கினார்.

குருவானர் ஒருவர் ஒரு குடும்பத்திடம் சென்ற போது அவர்கள் குடிசையில் ஏழ்மையில் இருப்பதையும் கண்டு, 'எப்படி வாழ்க்கையை நடத்துகிறீர்கள்?' என கேட்டார்.

'நாம் ஒரு லீற்றர் பால் தரும் பசுவில் தங்கி யிருக்கிறோம். அது தரும் பாலைக் குடிப்பதை விட, மிகுதியைத் தயிராக்கி நெய்யும் பெற்று வாழ்க்கையை போக்குகிறோம்' என்றார்கள்.

குடும்பத்தில் பெற்றோருடன் மூன்று குழந்தைகள். கேட்டு விட்டு வெளியேறிய குருவானவர் தனது சிஷ்யனிடம் 'அந்தப் பசுவை அவிழ்த்து காட்டுக்குள் துரத்தி விடு' என்று சொல்ல, தயக்கம் காட்டிய சிஷ்யனிடம் அதனை செய்யும்படி கண்டிமைப்படுத்தினார். அவனும் அவ்வாறே செய்தான்.

சில வருடங்கள் கழித்து அந்த பாதையால் வந்த குருவானர் சிஷ்யனிடம் குடிசைக்குப் போய் அந்த குடும்பத்தைப்



பார்த்து வர அனுப்ப, அவன் திரும்பி வந்து, 'குடிசையின் அடையாளமே இல்லை. அங்கு ஒரு மாளிகைதான் இருக்கிறது. ஆகவே உள்ளே போகவில்லை' என்று கூறினான்.

பின்னர் இருவரும் அங்கு சென்ற போது அதே குடும்பம்தான் இப்பொழுது செல்வச் செழிப்பில் இருப்பதை அவதானித்துஎப்படிஎனக்கேட்க, மாடுதொலைந்து போனதால் தாங்கள் எல்லோரும் சுயமாக உழைத்து முன்னேறி விட்டனர் எனவும் அந்த மாடு இருந்தவரை அது தருவதே போதும் என்று இருந்து விட்டோம் என குடும்பத்தலைவன் கூறினான்.

ஒரு விதத்தில் பார்க்கும் போது ஏதோ பாலையாவது தந்து கொண்டிருக்கும் இந்த தமிழரசு மாட்டைத் துரத்திவிட்டால் எல்லோரும் தாங்களாகவே உழைத்து தமிழ் தேசியத்தை முன்னேற்றி விடுவார்களோ என்னவோ...!

சுல்தானா தனது பாட்டி தன்னைக் கிழிந்த பாயில் படுக்க வைத்து வானத்து நட்சத்திரங்களையெல்லாம் காட்டி அவற்றை பிடித்து தனது சட்டை பாக்கட்டில் போட்டு கதைகள் சொல்லி தூங்கவைப்பாராம். காலையில் எழுந்து பாட்டியிடம் நட்சத்திரங்கள் ஒன்றுமே பாக்கெட்டில் இல்லை என்று கூறினால் அப்படியா, இந்த நிலா வந்து அவற்றைக் கொண்டு போயிருக்கும், பொறு நிலா வந்ததும் பிடித்து தருகிறேன் என்பாளாம் பாட்டி.

பிரபாகரன் எங்களை நடுத்தெருவில் விட்டுப் போகவில்லை. சர்வதேச மனித உரிமை மன்றின் நடுவில்தான் விட்டு போயிருக்கிறார். போகும் போதும் எங்களை கைவிட்டுப் போகவில்லை என உணர்ச்சியோடு வித்தியாதரன் அந்தப் பேச்சில் ஆணித்தரமாக சொன்னார். பிரபாகரனால்தான் நாம் மனித உரிமை மன்றில் நிற்கிறோம். அது உண்மை.

அந்த நிலா வந்ததுதான், நாம் நட்சத்திரங்களை பிடித்து பாக்கட்டில் போடலாம் என்றும் பாட்டி சொன்ன கதைகள் போல் இவற்றையும் கேட்க வேண்டும்.

அரசியல் நகர்வுகளை இப்பொழுது பார்க்கும் போது, அமெரிக்கா நிலா தமிழ் மக்களுக்காக உதிக்காத வரை அது ஸ்ரீலங்கா என்ற மோகத்தில் மறைந்து விட்டால் நட்சத்திரங்கள் தெரியப் போவதும் இல்லை.

இரேனியஸ் கெல்வின் பாலஸ்தினத்தை பற்றி பதிந்த யதார்த்தத்தையும் பார்க்க வேண்டும். சர்வதேசம் எதனை சொன்னாலும், ஐ.நா. இஸ்ரேலுக்கு எதிராக எவ்வளவு பாரதூரமான தீர்மானங்களை நிறைவேற்றினாலும், அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதற்கு அமெரிக்கா பின்னணியில் இருப்பதும் அவர்களின் நட்பும்தான் காரணம்.

தமிழகத்தின் மூலமாக தமிழ் மக்களுக்கு இருக்கும் தொப்புள் கொடி உறவையும் தென் மாநிலங்களில் வளர்த்து கொண்ட ஆதரவோடு இந்தியாவுடன் – இஸ்ரேல், அமெரிக்காவோடு பேணும் உறவு போன்ற – ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள தொடர்ந்தும் தமிழ் மக்கள் தவறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அமெரிக்கா, மேலைநாடுகளை, இப்பொழுது சீனா பூச்சாண்டியை காட்டி ஸ்ரீலங்கா இந்தியாவை தனது கோட்டுக்குள் வைக்கிறது.

(வளரும்......)

# நாட்டை அழிக்க வந்தவர்களே இவர்கள் ராஜபக்ஷவினரை துடைத்தெறிய வேண்டும்!

## பத்தரமுல்லே சீலரதன தேரர் காட்டம்



அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகின்றமை போல் சீனாவின் கழிவுக் கப்பலுக்கு செலுத்திய 67 லட்சம் டொலர் பணம் சிறிய தொகையா என கேட்டுள்ள ஜனசெத பெரமுனவின் தலைவரான பத்தரமுல்லே சீலரதன தேரர், இந்த பணம் ஜோன்ஸ்டனின் வீட்டில் இருந்து கொண்டு வரப்பட்டதா என கேள்வி எழுப்பியுள்ளார்.

67 லட்சம் டொலர் இலங்கைக்கு சிறிய தொகை எனவும் நாட்டில் பணம் இருப்பதாகவும் சீனாவின் கழிவுக் கப்பலுக்கு பணத்தை செலுத்த முடியும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார் எனவும் சீலரதன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

பலாங்கொடை புட்டுபாஹின்ன பிரதேசத்தில் நடைபெற்ற கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே தேரர் இதனைக் கூறியுள்ளார்.

இவர்கள் விலங்குகள், பாம்புகள் இவர்களை விரட்டியடிக்க வேண்டும். நாட்டில் பிள்ளைகளுக்கு பால் மாவை கொள்வனவு செய்ய பணமில்லை. 67 லட்சம் டொலரை கழிவுக் கப்பலுக்கு செலுத்த முடியும் எனக் கூறுகின்றனர்.

இவர்கள் நாட்டை முன்னேற்ற ஆட்சிக்கு வந்தவர்கள் அல்லர். நாட்டை அழிக்க வந்தவர்கள். நாட்டின் அனைத்து வளங்களையும் வெளிநாட்டவருக்கு விற்று சாப்பிடுகின்றனர்.

வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கைக்கு வந்து நாட்டை ஆட்சி செய்கின்றனர். மக்கள் 69 லட்சம் வாக்குகளை வழங்கினார்கள். 70 லட்சம் வாக்குகளை வழங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

கோட்டாபய, பஸில், மஹிந்த, நாமல் இவர்களில் எவராக இருந்தாலும் இவர்களுக்கு தூர நோக்கு கிடையாது. இவர்கள் தமது ஏழு தலைமுறைகளுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்துள்ளனர்.

இன்னும் சிறிது நாளில் மக்களையும் விற்று விடுவார்கள். அனைத்து அரசியல் கட்சிகளும், இன, சாதி பேதங்கள் இன்றி இணைந்து ராஜபக்ஷவினரை இந்த நாட்டில் இருந்து துடைத்தெறிய வேண்டும்.

அதனை உழவு இயந்திர சின்னத்தை கொண்டுள்ள ஜனசெத பெரமுனவாலேயே செய்ய முடியும் எனவும் பத்தரமுல்லே சீலரதன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களுடனான கூட்டங்களுக்கு அழைப்பு தாமதமாக வருகின்றது

## வலி.தென்மேற்கு பிரதேச சபை குற்றச்சாட்டு

மக்களுக்கான கூட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் ஆகிய எமக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பு தான் அழைப்புகள் வருகின்றதென வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஜெபநேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

கிராமத்துடனான கலந்துரையாடல் மூலமான பிரதேச அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் பிரதேச மட்டத்திலான கலந்துரையாடல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இவ்வாறான சந்திப்புகள் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நடைபெறுகின்றன என்பது தொடர்பில் சமூக வலைத்தளங்களின் ஊடாக அறிந்து பிரதேச செயலாளருக்கும் அல்லது அரசாங்க அதிபருக்கும் தெரியப்படுத்தி தான் நாங்கள் எங்களுக்கான அழைப்பைப் பெற வேண்டியுள்ளது.

அந்த வகையிலே, இன்றைய சந்திப்பு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாக தான் எனக்கும், உறுப்பினருக்கும் கிடைக்கப்பெற்றது. உண்மையிலேயே நாட்டினுடைய அபிவிருத்தி திட்டத்திலேயே ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதில் மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. நாம் ஒன்றாக இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதற்குப் பிரதேச சபையை முழுமையாகப் புறமொதுக்கி அபிவிருத்தி வேலைகளையும் கட்டுமானங்களையும் மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்திலே அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிலைப்பாடு எங்களுக்கு இருக்கின்றது.

எனவே, தேசிய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக ஒரே நாடு; ஒரே சட்டம் என்பதுபோல எங்களுடைய பிரதேசங்களிலே எங்களுடைய மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கி அதற்குரிய உள்வாங்கல்களை எடுப்பதில் என்ன ஆட்சேபணை என்பது எனக்குத் தெரியவில்லை.

ஒவ்வொரு தடவையும் நான் பிரதேச செயலாளரிடம் எடுத்து கேட்டு அதன் பிற்பாடு அரசாங்க அதிபரோடு கதைத்து தான் ஒவ்வொரு கோரிக்கைகளையும் பெற வேண்டி இருக்கின்றது. இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் தனது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த அங்கஜன் இராமநாதன் –

ஆரம்பத்திலேயே பிரதேச தவிசாளர்கள், உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை என்பதை அறிந்த பின் உடனடியாகத் தொடர்பு கொண்டு பிரதேச செயலகத்தினருக்கு அறிவுறுத்தியிருந்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

அந்தவேளையில், வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோ, கடந்த 15 ஆம் திகதி குறித்த கூட்டங்களிற்கான கடிதம் ஒன்று மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் இங்கே எமக்கு 17 ஆம் திகதி திகதி இடப்பட்டு எமக்கு தொலைநகல் மூலமாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் இங்கு முன்வைப்பதற்கான காரணம் நாங்கள் உங்களுடன் இணைந்து பங்காளிகளாக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்றால் நீங்கள் எங்களுக்கு அதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

நீங்களும் எங்களை மதிக்க வேண்டும். உதாரணத்துக்கு இன்று இந்த கூட்டத்திலேயே ஒரு சம்பவம் சொல்லப்பட்டது. ஒரு பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு பிரதேச சபையால் எவ்வளவு பெரிய வேலையை செய்யக்கூடியதாக இருக்கின்றது என்பதை நாம் இங்கே செய்து காட்டியிருக்கின்றோம். செய்து கொண்டிருக்கின்றோம்.

இதற்கு நாம் மத்திய அரசாங்கத்தினுடையதோ இதர உதவிகளையோ நாடவில்லை. எங்களால் செய்யக்கூடிய விடயங்கள் எவையோ அதை நாங்கள் மக்களுக்காகச் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே நாம் இங்கு உங்களிடம் கேட்பது மக்களுக்குரிய திட்டங்களுடன் பிரதேச சபையினர் இணைந்து செயற்படுவதற்கு உரிய அறிவித்தல்களை உரிய நேரத்துக்கு எமக்கு வழங்கப்படுமிடத்து அதனுடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். – என்றார். இதற்கு பதிலளித்த அங்கஜன் இராமநாதன் –

உங்களுக்கு கடிதம் போடுவது எனது பணியல்ல. அதற்கென்று மாவட்ட செயலகத்தில் ஓர் அலுவலகம் இருக்கின்றது. அவர்களே உங்களுக்கான அழைப்புக் கடிதங்களை அனுப்புவர் – என்றார்.

இதற்கு பதிலளித்த உறுப்பினர், நாங்கள் உங்களை கடிதம் போட சொல்லவில்லை. அது உங்களுடைய வேலையும் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த துணைத் தலைவர் பிரதேச சபையினருக்கு தனி ஒரு கூட்டம் போடுவோம் இப்படியான காரணங்களால் தான் உங்களை கூட்டங்களுக்கு கூப்பிடுவது இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# நீண்டகால கடன் அடிப்படையில் எரிபொருளை கோரும் இலங்கை

## நைஜீரியா நாட்டிடம்





நீண்டகால கடன் அடிப்படையில் இலங்கைக்கு கச்சா எண்ணெய்யை வழங்குமாறு நைஜீரியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் இலங்கைக்கான நைஜீரிய தூதுவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சில் அமைச்சர் கம்மன்பில இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பு எரிசக்தி அமைச்சில் நடைபெற்றது.

எது எப்படி இருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள வெளிநாட்டு அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இலங்கை எரிபொருளை இறக்குமதி செய்வது தொடர்பில் பெரும் சிக்கலான நிலைமையை எதிர்நோக்கி வருகிறது.

இதன் காரணமாக நீண்டகால கடன் அடிப்படையில் எரிபொருளை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கை ஏற்கனவே சில நாடுகளுடன் பேச்சுகளை நடத்தியுள்ளது.

# கடை தீப்பற்றி காயத்துக்குள்ளான பெண் திருமலையில் சிகிச்சை பலனின்றிச் சாவு

திருகோணமலை – தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை 99 ஆம் கட்டை சந்தியில் பெற்றோல் கடை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் தீப்பற்றியதில் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான கடை உரிமையாளர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் நேற்று (செவ்வாய்க்கிழமை) உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

மேற்படி பெற்றோல் கடையின் உள் பகுதியில் சோளக் கதிரை தீ மூற்றி அடுப்பில் வைத்திருந்த நிலையில் பெற்றோல் தீப்பிடித்திருக்கலாம் என ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இரு பிள்ளைகளின் தாயான எச்.எம்.சம்சுநிசா (வயது - 45) என்பவரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்.நகர் மணிக்கூட்டு கோபுர நேரசூசிகள் திருத்தும் பணிகள்

யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். நகர் மணிக்கூட்டு கோபுரத்தின் நான்கு பக்க நேரசூசிகள் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், மாநகர உறுப்பினர் வ.பார்த்தீபனால் திருத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அடையாளங்களில் ஒன்றாகப் பார்க்கப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் நாத ஒலி யாழ்.நகர் எங்கும் ஒலிக்கும் என யாழ். மாநகர உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

# வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் நடந்த வரவு - செலவுத் திட்ட கலந்துரையாடலில் குழப்பம்!

## பிரதேசசபை உறுப்பினர்கள் அதிருப்தி

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் "வரவு - செலவுத் திட்ட முன்னுரிமைகள் - 2022 பிரதேச மட்டக் கலந்துரையாடல்" என்னும் விடயதானத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 4.15 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும் என்று உறுப்பினர்களுக்கு அன்றைய தினமே எழுத்துமூலமான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

4.15 மணிக்கு கூட்டம் ஆரம்பமானாலும், அங்கஜன் இராமநாதன் எம்.பி. 4.30 மணிக்குப் பின்பே கூட்டத்துக்கு சமுகமளித்தார். கூட்டத்தில் பிரதேசசெயலாளர், பிரதேசத்தின் தவிசாளருடன் அவரின் பிரத்தியேக செயலாளருக்கும் சமதையாக பிரதேச செயலகத்தினரால் முன் அரங்க இருக்கை போடப்பட்டிருந்தது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரின் உரையைத் தொடர்ந்து, சிறுதொழில் முயற்சி, கிராமியக் கைத்தொழில் போன்றவை தொடர்பான விளக்கமளிப்பு உத்தியோகத்தர்களால் சுமார் இருமணிநேரம் இடம்பெற்றது. தொடர்ந்து பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரால் நன்றியுரை இடம்பெற்றது. இதனால், எமது பிரதேச அபிவிருத்தியில் அந்த மக்களின் பிரதிநிதிகளாகிய தங்களைக் கருத்துக்கூறவிடவில்லை என்பதால் நன்றியுரை நடைபெறும்போது உறுப்பினர்கள் தமக்குக் கருத்துக்கூற நேரம் தருமாறு கோரியும் திட்டமிடல் பணிப்பாளர் அதனைப் பொருட்படுத்தவில்லை. முன் அரங்கத்தில் அமர்ந்திருந்த அங்கஜனின் பிரத்தியேக செயலாளர் மக்கள் பிரதிநிதிகளை அமருமாறு கையைக் காட்டினார்.

கூட்டம் நிறைவடைந்ததும் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினரிடம், எமக்குக் கருத்துக்கூற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. எமது சார்பாக இந்தப் பிரதேசத்தின் முதல் பிரஜை தவிசாளரையாவது கருத்துக்கூற இடமளித்திருக்கலாம் என்று கேட்டதற்கு, அவர், நிகழ்ச்சிநிரலில் உங்களுக்குக் கருத்துக்கூற இடம் இல்லை. நிதி அமைச்சால் வழங்கப் பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே நாம் செயற்பட்டோம். நீங்கள் உண்மையில் வந்திருக்கத் தேவையில்லை. உங்களது தவிசாளர் சுகிர்தன் விளக்கமில்லாமல் நிதி அமைச்சிடம் தம்மை அழைக்கவில்லை என்று கேட்டு உங்களுக்கு அழைப்பைப் பெற்றுக்கொடுத்தார். நீங்களும் தெளிவில்லாமல் வந்துள்ளீர்கள். - என்றார்.

அதற்கு உறுப்பினர்கள் கடிதத் தலைப்பில் "வரவு - செலவுத் திட்ட முன்னுரிமைகள் - 2022 பிரதேச மட்டக் கலந்துரையாடல்" என்று பிரதேச செயலகத்தால் தலைப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எந்தத் திட்டத்தின் முன்னுரிமை தொடர்பிலும் கலந்துரையாடப்படவில்லை என்று குறைப்பட்டனர். அதற்கு அங்கஜன், அவர்களின் தவறுக்கு தான் ஒன்றும் கூறமுடியாது. பிரதேச செயலகத்தினர்தான் தெரிவிக்கவேண்டும்.- என்றார்.

இதற்கிடையில் எம்.பியின் பிரத்தியேக செயலாளர் என்று வந்தவர், நீங்கள் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பேசமுடியாது. உங்கள் எம்.பிக்கள் அதை ஆதரித்து வாக்களிக்கவில்லை. - என்றார். அதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிசார்ந்த பிரதேசசபை உறுப்பினர் கை. சீத்தாராமன், நாங்கள் கதைக்கலாம். எமது அமைச்சர் ஆதரவாகத்தான் வாக்களித்தவர். ஆனால், அது விடயமல்ல. எம்மை இதில் இருக்கவைத்துவிட்டு விடயதானம் தொடர்பில் பேசப்படவில்லை. வரவேற்கும்போது, பிரதேச செயலகத்தினர் எமது தவிசாளரை விளிக்கவில்லை. - என்றார். அங்கஜன், அது அவர்களிடம் கேளுங்கள் என்றுவிட்டு அங்கிருந்து சென்றார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளில் பணம்செலுத்த புதிய நடைமுறை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெளியேறும் வாயிலில் பணம் செலுத்த நடமாடும் செலுத்தல் செயலி நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதிவேக நெடுஞ்சாலை வெளியேறும் வாயிலில் நடமாடும் செலுத்தல் செயலியை பயன்படுத்தி பணப்பரிமாற்றம் செய்யும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) கொட்டாவ இடைபரிமாற்ற மத்திய நிலையத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேன் ட்ரஸ்ட் வங்கிக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இணைப்பின் அடிப்படையில் அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து வெளியேறும் போது கைகளால் பணம் செலுத்துவதற்கு பதிலாக இந்த நடமாடும் கட்டணப் பயன்பாடு பயன்படுத்தப்படலாம்.

நேன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இலங்கை மத்திய வங்கி, லங்கா கியூஆர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றை இதன் மூலம் இணைக்கின்றன. இந்த நடமாடும் கொடுப்பனவு செயலி தற்போது தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மேலும் எதிர்காலத்தில் மற்ற அதிவேக நெடுஞ்சாலைகளிலும் பயன்படுத்தப்படும்.

செயலியைக் கொண்டுள்ள எவரும் இந்த மொபைல் செயலியைப் பயன்படுத்தி, அவர்களின் நெடுஞ்சாலைக் கட்டணத்தை பணம் செலுத்தாமல் செயலியை பயன்படுத்தி பயணம் செய்ய முடியும். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், பயணத்தின் தொடக்கத்தில் பயணச்சீட்டை வெளியேறும் வாயிலில் சமர்ப்பித்து, பணம் செலுத்த குறியீட்டை ஸ்கேன் செய்தால் போதுமானது.

இந்த லங்கா கியூஆர் மொபைல் செயலியைப் பயன்படுத்துவது பணப் பயன்பாட்டைக் குறைக்கும், பணப்பயன்பாடு மூலம் கொவிட் தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கும், சமூகத்தை டிஜிற்றல் மயமாக்கலை நோக்கி நகர்த்தும், மேலும் நெடுஞ்சாலைகளின் வெளியேறும் வாயில்களுக்கு அருகில் அலுவலக நேரங்களில் அதிக போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்.

இந்த விழாவில் உரையாற்றிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வரலாற்றில் டிஜிட்டல் அமைச்சு என்பது பேச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. அந்தக் காலத்தில் அமைச்சு நகைச்சுவை அளிக்கும் நிறுவனமாக மாறியது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்து திறந்து வைத்ததன் பின்னர் இந்த அதிவேக நெடுஞ்சாலையில் 22.8 கோடி வாகனங்கள் பயணித்துள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போன்று தொலைநோக்குப் பார்வையுடன் செயற்பட முன்வருமாறு முகநூலைப்



பார்த்து நாட்டைக் கட்டியெழுப்ப ஆசைப்படும் ஜனாதிபதிகளிடம், வேண்டுகோள் விடுக்கிறேன்.

நேற்றுமுன்திமிரவு முதல் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. அரசாங்கம் என்ற வகையில் பெரும் நஷ்டத்தைச் சந்தித்த நிலையிலும் கடந்த காலமாக எண்ணெய் விலையை உயர்த்தப்படவில்லை. இந்த எண்ணெய் விலை உயர்வு தற்காலிகமா னது. எதிர்காலத்தில், நமது பொருளாதாரம் வலுவாக இருக்கும் போது, மீண்டும் எண்ணெய் விலையைக் குறைப்போம். உலகளாவிய தொற்று நோயு டன் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியால் நாம்வெவ்வேறு முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

எண்ணெய் விலையை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. உலகளாவிய பொருளாதார நெருக்கடி மீண்டும் வரும்போது, நாடும் அதன் மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால்தான் முதலில் மக்களின் உயிரைக் காத்தோம். எண்ணெயால் ஏற்படும் நஷ்டத்தை மக்களுக்கு வழங்காவிட்டால், அந்த இழப்பை அரசே ஏற்க வேண்டும். அந்த இழப்பை ஈடுகட்ட மக்கள் மீது அரசு வரி விதிக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் வரிச் சுமையை மக்கள் தான் சுமக்க வேண்டும். கட்டி அடித்தாலும் அடித்துக் கட்டினாலும் இரண்டும் ஒன்றுதான். எனவே இதை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

அனுர திஸாநாயக்க தான் கடந்த காலத்தில் பிசாசுகளை உருவாக்கி மீண்டும் இந்த நாட்டை பின்னோக்கி தள்ளினார். பிரபாகரன் வடக்கில் பயங்கரவாதத்தை செயல்படுத்தி இந்த நாட்டை பின்தள்ள வைத்தார்.

தெற்கில் இருந்த பயங்கரவாதிகள் இணைந்தும் அதனை தான் செய்தார்கள். தமது கடந்த காலத்தை மறந்து தற்போது இந்த நாட்டில் நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றனர். சந்தை நெருக்கடிகளை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவர்கள் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப எங்களுடன் இணைந்து கொள்ள வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எமது முயற்சிகளுக்கு அவர் உறுதுணையாகவும் இருக்க வேண்டும். அவர் தடுப்பூசி வழங்குவதை ஆதரிக்கவில்லை.

ஆனால் ரகசியமாகச் சென்று தடுப்பூசி போட்டார். அநுர திஸாநாயக்க தனது ஆதரவாளர்களுக்கு தடுப்பூசி போடுமாறு கூறவில்லை. அப்படியானால் அவரிடம் எப்படி ஆதரவை எதிர்பார்ப்பது? நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தி தனது கட்சி நிதியை பலப்படுத்த முயற்சிக்கிறார். தான் மாத்திரம் அரசியலால் வாழ்ந்தால் போதும் என்று அநுர திஸாநாயக்க நினைக்கிறார்.

# மின் கட்டணம் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட சலுகை நீடிப்பு

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்குமிடங்களுக்கு மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகையை தொடர்ந்தும் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சரவை பத்திரத்தினூடாக, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு 2020 மார்ச் முதலாம் திகதி முதல் 2021 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த மின்சார கட்டணச் சலுகையை இந்த ஆண்டு இறுதி வரை நீட்டிப்பதற்கும், அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 36 சம தவணைகளில் அனைத்து நிலுவைத் தவணைகளையும் செலுத்துவதற்கும், சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்குமிடங்களுக்கு உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு குறித்த அமைச்சரவைப் பத்திரத்தினூடாக முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த சலுகைக் காலத்தில் மின் இணைப்பைத் துண்டிக்கக் கூடாது என்றும், கட்டணம் செலுத்தப்படாத மின் பட்டியலுக்கு தாமதக் கட்டணம் அறவிடக் கூடாது. அதிக தேவை உள்ள காலங்களில் ஹோட்டல் துறையில் மின்சாரத்தின் அலகுக்கான விலையை ஏனைய தொழில்களுக்கு சமனானதாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

சுற்றுலாத் துறை தொடர்பான சேவை வழங்குநர்களின் பொருளாதார நிலை இன்னும் முழுமையாக முன்னேறவில்லை. ஹோட்டல்கள் தொடர்ந்து இயங்குவதற்கு மின்சாரத்தின் பயன்பாடு இன்றியமையாதது, இந்த நிலையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் நிவாரணம் வழங்கியது. சுற்றுலாத்துறை மீளும் வரையில் இந்தச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டின் காரணமாகவே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுற்றுலாத் தங்குமிட வசதிகளை வழங்குபவர்களுக்கான சலுகை

கொவிட் - 19 பெருந்தொற்றால் பாதிப்புக்குள்ளாகிய சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சுற்றுலா தங்குமிட வசதிகளை வழங்குபவர்களுக்கு மின்கட்டணத்தைச் செலுத்துவதற்காக 2021 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரைக்கும் சலுகைக் காலத்தை வழங்குவதற்கு 2021 ஜனவரி மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 2021 ஏப்ரல் மாதம் தொடக்கம் கொவிட் -19 தொற்று மீண்டும் பரவியமையால் சுற்றுலாத்துறையில் எதிர்பார்க்கப்பட்ட விருத்தி ஏற்படாமையால், சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, குறித்த சலுகைக் காலத்தை 2021 மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மேலும் இரண்டு வருடங்களுக்கு அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# அரசுக்கு எதிராக விவசாயிகள் வயலில் நின்றவாறு போராட்டம்

(ந.லோகதயாளன்)

அரசால் வழங்கப்பட்ட திரவ உரத்தால் தமக்கு எந்தவிதப் பயனும் கிடைக்கவில்லை என வட்டக்கச்சி இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாயிகள் வயலில் நின்று நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாய அமைச்சரே எமது இந்த அவலத்தைதிரும்பிப்பார்த்துநடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என அரசால் வழங்கிய திரவ உரத்தை ஏந்தி அவர்கள் வயலில் நின்றவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## வட, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பட்டுள்ளது.

அரசின் வடக்கு, கிழக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான விசேட இணைப்பாளரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான கீதநாத் காசிலிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலில் மீள்குடியேற்ற அமைச்சினால் துரித மீள்குடியேற்றத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கும் அவர், இதனால் நாட்டுக்குள் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த பல முகாம்கள் நிரந்தரமாக மூடப்படும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

கொவிட் - 19 தொற்றினால் மற்றைய பல துறைகளின் செயற்பாடுகள் மந்தமடைந்த போதிலும், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளோருக்கு மீள்குடியேற்றத்துக்கான காணிகள் மற்றும் வீடமைப்பு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் மீள்குடியேற்ற அமைச்சினால் மிகத் துரிதமாகச் செயற்பட முடிந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

வடக்கில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருப்போரின் எண்ணிக்கை இப்போது மிக சொற்பமே. அந்த முகாம்களை அடுத்து வரும் வருடங்களில் நிரந்தரமாக மூடுவதை இலக்காகக் கொண்டு அமைச்சுச் செயற்படுகின்றது என்றார் அவர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் தலா 6 லட்சம் ரூபா உதவித் திட்டத்தில் வீடுகளை அமைக்க 2, 500 பயனாளிகளும், தலா பத்து லட்சம் ரூபா உதவித் திட்டத்தில் வீடுகளை அமைக்க 3, 500 பயனாளிகளும் என ஆறாயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு உதவித் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது என்றார் அவர்.

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று அன்பாக அழைக்கப்படும் எஸ். தியாகராஜா நேற்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 92.

வாழ்நாள் முழுவதும் தமிழரசுக் கட்சியின் பெருந்தூணாக விளங்கிய தொழிலதிபர் அவர்.

யாழ்ப்பாணம் (ராஜா), வவுனியா (வசந்தி), திருகோணமலை (சரஸ்வதி), மட்டக்களப்பு (சாந்தி) தியேட்டர் உரிமையாளரான அவர் தந்தை செல்வா முதல் கொண்டு அனைத்துத் தமிழரசுக் கட்சித் தலைவர்களோடும் ஆத்மார்த்தமான நெருக்கத்தோடு பழகியவர். சிறுவயதில் மிகக் கீழ்மட்டத்திலிருந்து, தமது கடும் உழைப்பால் சமூகத்தில் உயர்ந்தவர். எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

## சர்வ கட்சி மாநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பில் எதிரணிகளின் நிலைப்பாடு இன்னும் வெளியிடப்படவில்லை.

## 24 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 795 ஆக அதிகரித்துள்ளது.

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கெரன் அன்ட்ரூஸுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பட்டப்படிப்புகளைப் பயில விரும்பும் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளின் ஆரம்பக் கட்டத்தை இலங்கையில் தொடர்வதற்குத் தேவையான கல்வி நிறுவனங்களை நிறுவுவதன் மூலம் இந்த வாய்ப்பு வழங்கப்படுகின்றது என ஆஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சுடன் இணைந்து தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக 12 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பசுமை விவசாயம் தொடர்பான இலங்கையின் கொள்கையைப் பாராட்டிய அமைச்சர், ஆஸ்திரேலியாவும் நிலைபேறான விவசாயத்தில் ஆர்வம் காட்டுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## 'ஜெனிவா தோல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கையளிக்கப்பட்டது.

ஜெனிவா நகரைத் தளமாகக் கொண்டு இலங்கையின் இறையாண்மையில் செல்வாக்குச் செலுத்துவதற்கு பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்திகளை ஆய்வுக்குட்படுத்தியும், தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயற்பாட்டில் கிடைத்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும் ஆனந்த தேரரால் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரான குணபால திஸ்ஸகுட்டியாரச்சியால் எழுதப்பட்ட 'அரசியலின் மறைக்கப்பட்ட கதைகள்' நூலும் ஜனாதிபதியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கொழும்பு ஹெவ்லொக் டவுன் சாம விஹாராதிபதி சங்கைக்குரிய அதபத்துகந்தே ஆனந்த தேரரும் கலந்து கொண்டிருந்தார்.

# முன்னணியின் இரு உறுப்பினர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கம்

(ந.லோகதயாளன்)

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் உறுப்பினர்கள் இருவரை உடனடியாகக் கட்சியை விட்டு நீக்குகிறேன் என அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பரமானந்தம் தவமணி மற்றும் காரைநகர் அமைப்பாளர் கணபதிப்பிள்ளை நிமலதாசன் ஆகிய இருவருமே கட்சியை விட்டு நீக்கப்படுகின்றனர் என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியும் சமூக நலன் சார்ந்தும் எடுக்கப்பட்ட முடிவான காரைநகர் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பது என்ற முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட கட்சி உறுப்பினரைக் கட்சியிலிருந்து விலக்குவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

நேற்று இடம்பெற்ற காரைநகர் பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் எதிர்த்து வாக்களித்தவர் என்பதுடன் வரவு - செலவுத்திட்டம் இரண்டாவது தடவை யாகும் இம்முறை தோற்கடிக்கப்பட்டுள் ளது.

# காரைநகர் பிரதேச சபையின் 'பட்ஜட்' மீண்டும் தோற்கடிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., காரைநகர் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று தவிசாளர் மயிலன் அப்புத்துரை தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தவிசாளரினால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாக சமர்ப்பிக்கப்பட்டது.

11 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையில், குறித்த வரவு - செலவுத் திட்டத்துக்குச் சுயேச்சைக் குழுவின் 3 உறுப்பினர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 2 உறுப்பினர்கள் என 5 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினர் என 6 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதன் அடிப்படையில் வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் காரைநகர் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதால் தவிசாளரும் தனது பதவியை இழந்துள்ளார்.

நேற்றிலிருந்து 14 நாள்களுக்குள் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற வேண்டும் என்பது சட்ட ஏற்பாடாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த காரைநகர் பிரதேச சபையின் ஆட்சி அப்போதைய தவிசாளர் உயிரிழந்தமையால் கடந்த மாதம் 10 ஆம் திகதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் சுயேச்சைக் குழு வசமானது.

பின்னர் புதிய தவிசாளரால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த 8ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையால் திருத்தங்கள் செய்யப்பட்டு மீண்டும் அது நேற்று சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலும் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி நினைத்தால் அமைச்சரவை மறுசீரமைப்பு

## டலஸ் கூறுகின்றார்

தற்போதைய அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமா என எம்மால் எதுவும் கூற முடியாது. அது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது, 2022ஆம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவை மாற்றம் குறித்து சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.



மாற்றம் பற்றி எமக்கு உறுதியாக கூற முடியாது.

அரசமைப்பின் பிரகாரம் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவர் நினைத்தால் மறுசீரமைப்பு செய்யலாம் - என்றார்.

# பால்மா விலையிலும் மீண்டும் அதிகரிப்பு

சந்தையில் தொடர்ந்து பால்மாவுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது எனவும், எதிர்காலத்தில் பால்மா விலையில் மீண்டும் மாற்றம் ஏற்படலாம் எனவும் பால்மா இறக் குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினை கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம் மற்றும் களஞ்சியசாலைகளின் கட்டண அதிகரிப்பு போன்ற காரணங்களால் பால்மா இறக்குமதியில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என அதன் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# வைத்தியர் ஷாபிக்கு சம்பள நிலுவை வழங்குவதை ஏற்றுக்கொள்ளமுடியாது!

## இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவிப்பு

குருணாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மருத்துவர் ஷாபி சிஹாப்தீனை நிலுவைச் சம்பளத்தை வழங்கி மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளும் தீர்மானத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

மருத்துவர் ஷாபி சிஹாப்தீன் சிங்கள பெண்களுக்கு கருத்தடை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அவருக்கு நிலுவைச் சம்பளத்தை வழங்கி சேவையில் இணைத்துக்கொண்டால், வழக்கு விசாரணைகள் பலவீனமடையும் எனவும் ஜயந்த சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மருத்துவர் ஷாபி சிஹாப்தீனை



மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் வேலணையில் உலருணவு விநியோகம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலணை, தாவடி, நாவற்குழி, மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்கின்ற, தொழில்வாய்ப்பிழந்த மற்றும் கொரோனாப் பேரிடர் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. இதனொரு கட்டமாகவே ஞாயிற்றுக்கிழமை தெரிவுசெய்யப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தது.

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் காத்தான்குடியில் கைதாகினார்

ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காத்தான்குடி மத்திய மகா வித்தியாலத்தின் பின்னால் உள்ள கர்பலா வீதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 64.286 மில்லி கிராம் பெறுமதியான ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

காத்தான்குடி - 6 ஆம் பிரிவைச் சேர்ந்த சந்தேக நபரான 50 வயது மதிக்கத்தக்க நபரே கைது செய்யப்பட்டுள்ளமையுடன் போதைப்பொருள் கடத்தப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் யாவும் காத்தான்குடி பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினரால் பாரப்படுத்தப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருள்களுடன் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த காத்தான்குடி பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்வதைத் தடுப்பதற்காக விசேட அதிரடிப்படையினரின் ரோந்து சேவை படைபிரிவு பல்வேறு தகவல்களைத் திரட்டி சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

# ஓட்டோ கட்டணமும் அதிகரிக்கப்படுகிறது

கி.மீ. கட்டணத்தை 50 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிக்க ஓட்டோ சாரதிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஓட்டோ சாரதிகள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

# வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு நோயாளர்கள் கடும் அவதியுறல்

வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக நேற்று (செவ்வாய்க்கிழமை) நுவரெலியா மாவட்டத்தில் சிகிச்சைக்காக சென்ற நோயாளிகள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பலர் வைத்தியர்களின் வேலை நிறுத்தம் பற்றி அறியாதமையால் வைத்தியசாலைக்கும் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளிலும் மருத்துவ சிகிச்சையை நாடினர்.

வேலை நிறுத்தம் காரணமாக சிகிச்சை பெறாமல் வீடு திரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டோனர் எனத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்டேனர் போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்பட்டது

கண்டேனர் போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நள்ளரிவு முதல் 20 சதவீதத்தால் கட்டணத்தை அதிகரிக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பேக்கரி உணவுப் பொருள்களின் கட்டுப்பாடு விலை நீக்கப்பட்டது!

## உரிமையாளர் சங்கம் அதிரடி அறிவிப்பு



பேக்கரி உற்பத்திப் பொருள்களுக்கு இனிவரும் காலங்களில் கட்டுப்பாட்டு விலை கிடையாது என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் பாண் உள்ளிட்ட அனைத்து விதமான பேக்கரி உற்பத்தி பொருள்களுக்கும் கட்டுப்பாட்டு விலையின்றி விற்பனை செய்யப்படும் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2021 இல் வெளியிடப்பெற்றது.